IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.
RANIPET DISTRICT.

DEPOSITION OF WITNESS
SC.No. 47/2026 – PW-2

| | |
|---|---|
| Name | திரு. தமிழ்மணி |
| Husband/Father Name | மாயகிருஷ்ணன் |
| Village /Area | வளையாத்தூர் |
| Taluk | கலவை |
| Occupation | முதல் நிலை காவலர் |
| Age | 35 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 02.07.2026.

**(எதிரிகள் முதல் வரை ஆஜர். கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது வாலாஜா காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.12.2025 ம் தேதி காலை 8.30 மணியளவில் அரக்கோணம் நகர காவல் நிலைய காவல் ஆய்வாளர் திரு.அசோகன் அவர்கள் தலைமையில் உதவி ஆய்வாளர் திரு.சிரஞ்சீவிலுவும், நானும், இரண்டாம் நிலை காவலர் 908 திரு.காமராஜன் ஆகியோர் சகிதம் பகல் ரோந்து மற்றும் குற்ற தடுப்பு அலுவலாக அரக்கோணம் நகர பகுதியில் கண்காணிப்புக்கு சென்ற போது புலனாளி அளித்த ரகசிய தகவலின் பேரில் அரக்கோணம் to மோசூர் ரோடு செல்லும் சாலையிலுள்ள நியூ சென்னை layout அருகே ரோட்டில் ஒரு நபர் நின்று கொண்டு கையில் பட்டா கத்தி வைத்துக் கொண்டு கத்தி கலாட்டா செய்து கொண்டிருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் காலை 9 மணியளவில் சம்பவ இடத்துக்கு சென்று பார்க்க அங்கு ஒரு நபர் கையில் சுமார் 2 அடி நீளமுள்ள பட்டா கத்தியை வைத்து கொண்டு நான் யார் என்று தெரியுமா அரக்கோணத்தில் நான் பெரிய ரவுடி என் மேல் நிறைய வழக்குகள் இருக்கு என்னை யாரும் மதிக்க மாட்ரீங்க அந்த வழியாக செல்பவர்களை குடிக்க பணம் கேட்டு தகராறு செய்தும் பணம் தரவில்லை என்றால் போட்டு தள்ளிவிடுவேன் என்று பொது மக்களுக்கு மரண பயத்தை ஏற்படுத்தும் வகையிலும் அச்சுறுத்தும் வகையிலும் யாராவது கேட்டால் வெட்டி காலி செய்து விடுவேன் என்றும் போக்குவரத்துக்கும் பொது மக்களுக்கும் இடையூறு செய்த நபரை எச்சரித்தும் கேளாது மீண்டும் மீண்டும் கத்தி கலாட்ட

செய்தவரை அந்த இடத்தில் கைது செய்யாமல் விட்டால் பொது மக்கள் யாருக்காவது ஆபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது என முன் எச்சரிக்கை மேற்படி நபரை மடக்கி பிடிக்க அவர் தன் பெயர் அசோக்குமார், வயது.30, த/பெ.புஷ்பராஜ், எண்.81, பஜனை கோயில் தெரு, கிரிபிஸ்பேட்டை, அரக்கோணம் என்று கூறியவரை மேற்படி குற்ற காரணம் கூறி காலை 9 மணிக்கு காவல் ஆய்வாளர் அவர்கள் கைது செய்தும் கைது செய்த விவரத்தை அவருடைய உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தும் மேலும் கைது குறித்த விவரத்தினை பிரிவு 37 BNSS ன்படி மாவட்ட அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து பின்னர் எதிரி எவ்வித அச்சுறுத்தலும் துன்புறுத்தலும் ஆசை வார்த்தையுமின்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ய பொது மக்கள் சாட்சிகள் யாரும் இல்லாததால் உடன் இருந்த போலீஸ் சாட்சிகளான எங்கள் முன்னிலையில் காலை 9.15 மணி முதல் 10.15 மணி வரை பதிவு செய்யப்பட்டது. மேற்படி எதிரி கையில் வைத்திருந்த 2 அடி நீள பட்டா கத்தியை எங்கள் முன்னிலையில் காலை 10.30 மணிக்கு காவல் ஆய்வாளர் அவர்கள் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியும் பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் காலை 10.45 மணிக்கு நிலையம் சேர்ந்து எதிரி மீது குற்ற எண்.748/2025 வழக்கு பதிவு செய்தார். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் வழக்கு சொத்தான பட்டா கத்தியை தான் ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார். அது **சா.பொ.1** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் யாரும் ஆஜர் ஆகாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.08.01 17:10:05 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.